V12 No1 Jan 1950

3L

M30·12·1

210782

17 JUN 1930

உ

செந்திலாண்டவன் திருவடி துணை

பாலவிநோதினி

அல்லது

குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

தொகுதி 12 | 1930 ஆம் ஜனவரி மாதம் | பகுதி 1

தெய்வ வணக்கம்

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரைவ தைத்தமுகம் ஒன்றே
வள்ளியை மணம்புரிய வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்தபெரு மாளே.

(திருப்புகழ்)

210782
சென்னை-600 008

பாலவிநோதினியின் பதினோராவதாண்டு விஜயம்.

"கல்வி யழகே அழகு"—எனப் பெரியார் கூறுகிறபடியால் கல்வி யழகைத் தமிழ் உலகில் சிறுவர்க்கு உதவுமோர் நல்ல கடமையை மேற்கொண்டது பாலவிநோதினி. இது தமிழுலகு அறிந்த விஷயமாகும். பாலவிநோதினி சென்ற பத்து வருஷகாலமாக எங்கும் நிறைந்து எல்லாமாயிலகும் பரம கருணாநிதியாகிய முருகப்பெருமான் திருவருளாலும் பெரியோர்களுடைய ஆசிர்வாதத்தாலும்—தான் மேற்கொண்ட கடமையை முட்டின்றிச் செய்துவந்து இப்போது பதினோராவதாண்டை அடைந்திருக்கிறது. இவ்வாண்டிலும் அது தன்னுடைய அந்த உயர்ந்த கடமையில் தளரா ஊக்கங் காட்டவும், புதிய புதிய விஷயங்களைக் குழந்தைகள் எளிதிலுணரத்தக்க சித்திரப் படங்களுடனும் நீதி வாக்கியங்களுடனும், கதாரூபமாய் வெளியிட்டு, மலைமேல் விளக்கைப் போல் விளங்கவும், பொருள் படைத்த சீமான், சீமாட்டிகளுடைய உதவியும், அறிவுடைய பெரியாரின் உதவியும் ஏற்படுமாறு, அடியார் இடர் நீக்கி ஆள, அவர் மனத்தே குடியாக வாழுங் குகப் பெருமான் திருவருள் பெருக அவனை வேண்டுகின்றோம்.

இங்ஙனம்

பத்திராசிரியர்.

ஹிதோபதேசம்

(1) உலகத்தில் மக்களுக்கு நன்மை தரும் குணங்கள் ஐந்து. அவை நல்ல ஒழுக்கம், கொல்லாமை, பொய் கூறாமை, புலாலுண்ணாமை, கள்ளாமை என்பனவாம்.

(2) பொருளைத் தேடி அடைந்தவனுக்கே சுகமுண்டு. அருளுடையவனுக்கே அதாவது ஜீவர்களிடத்தில் இரக்கமுடையவனுக்கே தருமமுண்டு. ஏனென்றால் அருளுடையவன் பழியையும் பாவத்தையும் செய்யான்; புறங் கூறித் திரியவும் மாட்டான்.

(3) கற்புடைய பெண், அமிர்தத்துக்குச் சமானமாவாள். கற்கவேண்டிய நூல்களை யெல்லாம் கற்று அடக்கமுடையவனா யிருப்பவனும் அமிர்தத்துக்குச் சமானமாவான். நல்ல குணமுடைய குடிகளைப் படைத்த நாடு அந்நாட்டு வேந்தனுக்கு அமிர்தமாகும். அந்த நாட்டுக்கு நல்ல குணமுடைய வேந்தன் அமிர்தம். அவ் வேந்தனுக்கு அவனுக்கினியவை நாடும் சேவகர்கள் அமிர்தம்.

(4) ஆசிரியனிடத்துக் கற்கவேண்டிய முறைப்படி கல்லாதவனாகிய ஒருவன் தானே ஆராய்ந்து காண்கிற நுண்பொருளும், இரண்டு காதுமில்லாதவளாகிய ஒருத்தி அழகுடையேன் என்று இறுமாப்படைதலும், பொருளில்லாதவன் இசையாத ஒரு பொருளைத் தரித்திரருக்குக் கொடுத்தால், அவன்

அருளுடையான் என்று சொல்லப்படுதலும் ஆகிய இவற்றை நல்லவர் கேட்பின் நகைப்பார்கள்.

(5) இனி இவ்வுலகத்தில் நீ பிறவாதிருக்கும் நெறியைப் பெறவேண்டுமானால் தவம் செய்யக்கடவாய்! இவ்வுலகத்திற் புகழை நிலை நாட்டவேண்டுமானால் இல்லாதவர்க்குக் கொடுத்து ஆதரிக்கக் கடவாய்! வீரம் சிறக்கவேண்டுமானால் அறிஞர்க் கடங்கி நடக்கக் கடவாய்!, இவற்றுடன் பிறன் மனைவியை விரும்பாதிருப்பாயானால் செல்வம் வந்து தானே உன்னிடம் குடிபுகும்.

(6) சேனைக் கழகு யானையாம். பெண்களுடைய இடைக் கழகு நுட்பமாம். ஒருவனுடைய ஒழுக்கத்துக்குப் பக்ஷபாத மில்லாமற் பேசுவதே அழகாம். செங்கோலுக்கு அதுவே அழகாம். சேவகர்க்கு ஒரு காலத்தும் குறையாத வீரத்தன்மையே அழகாம்.

(7) வேதங் கூறும் நெறிப்படி நடப்பவனே தவசியாவான். எல்லா முணர்ந்தவன் முதல்வனாவான். பகுத்துண்பவன் பார்ப்பானாவான். பழிக் கேதுவான செய்கைகளை அறிந்து விலக்குகிறவன் மேலானவனாவான். உண்ணத் தகாதவற்றை விலக்கிப் புசிப்பவன் பிணியில்லாதவனாவான்.

அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் விஷமாம்

சகோதரவாஞ்சை

—: (o) :—

“ஸ்ரீராமமூர்த்திக்குப் பட்டமில்லை, பரதனுக்குப் பட்டம்; கைகேயினால் ஸ்ரீராமமூர்த்தியைத் தசரதர் காட்டுக்கு அனுப்புகிறார்” என்னும் சமாசாரம் இலட்சுமணனுக்குத் தெரிந்தது. இலட்சுமணன் ஸ்ரீ ராமமூர்த்தியினிடம் விசுவாசமுடையவன். ஆகையால் அந்தச் சமாசாரம் கேட்டதும் “அப்படியா!” என்று அவன் கோபங்கொண்டான்.

அப்பொழுது அவன் கண்களிலே நெருப்புப் பொறி பறந்தது. புருவங்கள் இரண்டும் நிமிர்ந்தன. தேகம் வேர்த்தது. அவன் பாம்பு சீறுவதுபோல் பெருமூச்சுவிட்டான். “என்ன துணிவு! என்ன துணிவு! ஒரு சிங்கத்துக்கு வைத்திருந்த உணவை ஒரு நாய்க்குட்டிக்கு இரையாக்கின ளல்லவா? நன்றாயிருக்கிறது! நன்றாயிருக்கிறது! ஒரு மாதின் திறமை!” என்றான்! கைகளைக் கொட்டினான்; நகைத்தான்; இடுப்பில் கச்சை வரிந்து கட்டினான்; கையில் வில்லை ஏந்திக் கொண்டான்; தோளில் அம்பறுத்தூணி தரித்தான்; மார்பிலே கவசம் பூண்டான்; காலில் வீரகண்டாமணி அணிந்தான்.

அப்பால் அவன் தன் முன்பிருந்த எல்லோரையும் பார்த்தான். “இதோ என்னை எதிர்ப்பவர்களை அதமாக்குகிறேன். அண்ணா ஸ்ரீராமமூர்த்திக்குப் பட்

டாபிஷேகம் செய்விக்கிறேன். இதற்காகவே நான் புறப்பட்டேன். கைகேயி யென்கிற ஒரு ஸ்திரீயால் வந்ததல்லவா இது? இதோ பெண்களென்கிற பூண்டே இந்த ராஜ்யத்தி லில்லாதபடி செய்கிறேன், அண்ணனுக்குப் பட்டமில்லை; தம்பிக்குப் பட்டமா?" என்று சொல்லித் தன் கை வில்லை இழுத்து நாணேற்றினான்.

இந்த வேளையில் ஸ்ரீராமமூர்த்தி தமது சிற்றன்னை ஸுமித்திரையினிடம் உத்தரவு பெற்றுக்கொள்ளப் போகிறார். அவருடைய காதில் இலட்சுமணனுடைய வில்லோசை கேட்டது. அவர் "என்ன இது" என்று ஆச்சரியப்பட்டு இலட்சுமண னிருக்கும் பக்கம் வந்தார். இலட்சுமணன் பெருங் கோபத்தோடு நிற்பதைப் பார்த்தார்; அதிசயித்தார் ;"தம்பி! எதற்காக நீ இப்படி வில்லைப் பிடித்துக்கொண்டு கோபத்தோடு நிற்கிறாய்?" என்று கேட்டார்.

இலட்சுமணன், "அண்ணா, கைகேயி ஸத்தியத்தை விட்டாள்; முறைதப்பினாள். அந்தப் பாவியின் கண் முன்னே தமக்குப் பட்டாபிஷேகம் செய்விக்கப் போகிறேன். இதற்கு விரோதமாக யாராவது வந்து நின்றால், அவர்களை அதமாக்கவே வில்லைக் கையிலே பிடித்தேன்" என்றான்.

ஸ்ரீராமமூர்த்தி, "தம்பி, நீதிமானான நீ இப்படிக் கோபங்கொள்வ தாகுமா?" என்று கேட்டார். இலட்சுமணன், "இராஜ்யம் உமக்குச் சொந்தம். நீர் மூத்தவரல்லவா? அதைத் தந்தை உமக்குக் கொடுத்தார். அதை நடுவிலே நீர் பகையாளியினால் இழப்பதா?

வனஞ் செல்வதா தாம்? உம்மிடத்தில் அன்பில்லாத ஒருத்தி உம்மை வனத்துக்கு அனுப்புவதை நான் பார்த்துக்கொண்டு உயிரோடிருப்பேனா? எப்படியிருப்பேன்? முன்னே உமக்கு இராஜ்யம் கொடுத்தார்; பிறகு இல்லை என்றாரே அவரா (தசரதர்) நான்?" என்றான்.

ஸ்ரீராமமூர்த்தி, "தம்பி ; ஒருவர் பேரிலும கோபங் கொள்ளாதே. யாரிடத்திலும் குற்றமில்லை. நமது விதியின் குற்றமிது. அதற்குக் கோபித்துக் கொள்வதாகுமா?" என்றார்.

இலட்சுமணன், "அண்ணா, கருமானுடைய உலையிலெழும்பும் தீயைப்போல் என் மனதிலே கோபம் எழும்புகிறது. அது எப்படித் தீரும்? அண்ணா, சற்று என் கை வில்லினுடைய தொழிலைப் பார்த்துக்கொண்டிரும்" என்று சொல்லி வில்லைக் கீழே ஊன்றினான் அப்போது அங்கிருந்தவர்களெல்லோரும் நடுங்கினார்கள்.

ஸ்ரீராமமூர்த்தி, "தம்பி, இப்படியெல்லாம் சொல்லாதே. படித்தவனல்லவா நீ? தாய் தந்தையரின்மீது கோபித்துக் கொள்ளலாமா?" என்றார் இலட்சுமணன், "அண்ணா, என் தந்தையும் நீரே! என் தாயும் நீரே! சகலமும் நீரே! இதோ பாரும் நான் செய்யப்போகும் காரியத்தை" என்றான். ஸ்ரீராமமூர்த்தி. "தம்பி, நிதானி; பொறுமைகொள். வரம் கொடுத்தவர் யார்? தந்தை. வரம் வாங்கினவர் யார்?- அன்னை. இராஜ்யம் ஆளுகிறவன் யாவன்?- தம்பி. எனக்குக் கிடைத்தது தவம். இதைப் பார்க்கினும்

மேலான நலம் என்ன இருக்கிறது? நீ ஏன் கோபம் கொள்கிறாய்?" என்றார்.

இலட்சுமணன், "அண்ணா, நான் பகைவர்கள் சொல்லுகிற பேச்சைச் சுமக்கப் பிறந்தேன். வில்லையும் அம்பறாத்தூணியையும் வீணே சுமக்கப் பிறந்தேன். நான் கோபித்தாகவேண்டிய தென்ன?" என்று வெறுப்பாகப் பேசினான். ஸ்ரீராமமூர்த்தி, "தம்பி, என் பேச்சைக் கேள்; தட்டாதே. என்னைப் பெற்று வளர்த்தவர்களுடைய பேச்சைத் தட்டி அரசாட்சி செய்வது எனக்கு அழகல்ல. இதனாலுனக் கென்ன குறை?" என்றார்.

இலட்சுமணன் ஒன்றும் பேசவில்லை; பெருமூச்சு விட்டுக்கொண்டு நின்றான். ஸ்ரீராமமூாத்தி அவனைப் பார்த்து, "தம்பீ, கேள்! அன்புடைய தம்பியைக் கொல்லவேண்டும்; தகப்பனை வெல்லவேண்டும்; தாயைக் கொல்லவேண்டும்; பிறகல்லவா உன்னுடைய இந்தக் கோபம் தணியவேண்டியதாயிருக்கிறது" என்று கேட்டார்.

இப்பொழுது இலட்சும்ணன் கோப மடங்கிற்று. அவன் கை வில் தானே கீழே விழுந்துவிட்டது. ஸ்ரீராமமூர்த்தியைப் பார்த்தபடியே அவன் கைகுவித்தான். ஸ்ரீராமமூர்த்தி அவனை மகிழ்ச்சியோடு தழுவிக்கொண்டார்; "நீ இங்கிரு. என் பிரிவால் வருந்தும் தாய் தந்தையரைக் காப்பாற்றி வா. நான் அவர் இட்ட கட்டளையை நிறைவேற்றுகிறேன்" என்றார்.

இதைக் கேட்டதும் இலட்சுமணனுக்குத் துக்கம் வந்துவிட்டது. அவன் கண்களிலிருந்து நீர் மளமள

என்று பெருகிற்று. அவன் விம்மி விம்மி அழுதான்; தன் அண்ணாவைத் தொழுதான்; "அண்ணா நான் யார்? ஒரு ஸ்திரீயின் பேச்சைக் கேட்டுக்கொண்டு உம்மைக் காட்டுக்கு அனுப்பினாரே, அவருடைய பிள்ளை! அதனாலல்லவா நீர் இந்த வார்த்தை சொன்னீர்? தகும்" என்று கைகட்டிக் கொண்டான்.

ஸ்ரீராமமூர்த்தி, "இலட்சுமணா, இங்கே பார்" என்றார். இலட்சுமணன், "அண்ணா, தாம் காட்டுக்குப் போவ்தாகக் கேட்டதும் பெருங் கோபங்கொண்டேன்! அந்தக் கோபத்தை விட்டுவிடும்படி நீர் சொன்னீர். அதை விடக்கொடிய வார்த்தை சொலலுகிறீர்!" என்று சொல்லிக் கண்ணீர் பெருக்கினான்.

ஸ்ரீராமமூர்த்தி, 'சரி, நீயும் என்னுடன் புறப்படு. சுமித்திரையிடமும் ஸீதையினிடமும் சொல்லிக் கொண்டு வருகிறேன்" என்று சொல்லிச் சென்றார்.

தெய்வஞ் சீறிற்கைதவமாளும்.
சிவத்தைப் பேணிற் றவத்திற் கழகு
தெய்வமிகழேல்

தேவி பராக்ரமம்

1. மகிடாசுர சங்காரம்.

முன் காலத்தில் சூரியவன்னி என்னும் பெயர் கொண்ட அரசனொருவ னிருந்தான். அவன் மநுநீதி தவறாமல் அரசாட்சி செய்துவந்தான்; பகைவர் கண்டஞ்சத்தக்க ஆண்மையுடன் விளங்கினான்; அழகில் மன்மதனைவிட இவனே மேலானவன் என்று எல்லோரும் புகழத்தக்க அழகுடையவனா யிருந்தான்.

செல்வச் சிறப்புடன் விளங்கிய அவ்வரசன் ஆசாரமுடையவனாயும் சிவபெருமானிடம் அன்புடையவனாயு மிருந்தான். ஆகையினால் அவன் சிவபூஜையின்றி அன்னம் புசிப்பதில்லை.

இப்படி யிருக்கையில் அக்காலத்தில் மகிஷன் என்னும் ஓர் அவுணன் தோன்றிப் பிரமதேவனைக் குறித்துத் தவமிருந்து, சிவன், விஷ்ணு, இந்திரன், இவர்கள் எவர்களாலும் இடையூறின்றி வாழ்வதற்கேற்ற பல ஆயுதங்களைப் பெற்று, வெகு அகங்காரத்துடன் உலக கண்டகனாகத் திரிந்தான்; அந்தணர்கள், அவர்கள் செய்யும் யாகங்கள், அறச் சாலைகள், கோயில் குளங்கள், முனிவ ராச்சிரமங்கள் இவைகளைத் தகர்த்து எல்லோரையும் இம்சித்து வந்தான்.

இவ்வாறு அவனால் துன்பமடைந்த ஜனங்கள் அரசனிடம் முறையிட்டார்கள். அரசன் சிவபெருமானை நோக்கித் தவம் புரிந்தான். சிவபெருமான்

அவன்முன் தோன்றி, "வேந்தே! கவலைப்படாதே நாம் துர்க்கையை அனுப்புகிறோம். துர்க்கை அவ்வவுணனைச் சங்கரித்து க்ஷேமத்தைக் கொடுப்பாள்" என்று கூறிச் சென்றார்.

பின் சிவபெருமான் தமது தேவியை நோக்கி, "நீ துர்க்கை வடிவங்கொண்டு சப்த கன்னியரோடு சென்று, நமது பக்தர்களுக்கு இடுக்கண் புரியும் அத்துஷ்ட அவுணனைச் சங்காரஞ் செய்துவிட்டு வரக் கடவாய்" என்றாக்ஞை யிட்டார்.

பார்வதி உடனே துர்க்கை வடிவங்கொண்டு, சிங்கவாகனத்தி லேறி யமர்ந்து, சப்த கன்னிகைகளுடன் புறப்பட்டு வந்து, அவ்வவுணனைத் திருவண்ணாமலையிலே கண்டு, 'நீ ஒழுங்கீனமான செய்கைகளைச் செய்து உலகத்தைத் துன்புறுத்துகிறாய். ஆகையால் நீ உலகில் இருக்கத் தகாது. இதை விட்டொழிந்து போ. இல்லையேல் என்னுடன் அமர் புரிந்து என் வாளுக்கிரையாய் இறக்கத் துணி" என்று கூறினார்.

இதைக் கேட்டதும் அவுணன் வெகுண்டு, கண்ணினின்றும் தீப்பொறி பறக்க விழித்துப் பார்த்து, "நீ ஒரு பெண்பாலானதால் இந்த வார்த்தை கூறி உயிர் பிழைத்தாய். ஆண்பாலா யிருந்தால் நீ அடையும் கதி வேறு" என்று சொல்லி, "வீணே ஏன் உயிரை இழக்கிறாய்? நான் மாதர்களை வருத்துவதில்லை. இவ்விடம் விட்டுச் சீக்கிரம் செல்" என்று கூறினான்.

இம்மொழிகளைக் கேட்டதும் தேவி மிகச் சினங்கொண்டு "மகிஷா! நீ புருஷனானால் சற்று என்னோடு எதிர்த்து நின்று அமர் செய், பார்ப்போம. இனி நீ

பிழைக்கப் போவதில்லை" என்று கூற, அவுணன் சினங்கொண்டு துர்க்கையின்மேல் பாணப்பிரயோகம் செய்தான். தேவியார் அவனை மதியாது பாணங்களை மாரியாகச் சொரிந்து அவனுடலைச் சல்லடைக் கண்களாகத் துளைத்தார். அப்படியும் அவ்வவுணன் சளைக்காமல் துர்க்கா தேவியோடு போர்புரிந்தான். தேவியார் அவனோடு, பலநாள் மலைந்து, பின் அம்மகிஷனுடைய இரண்டு கொம்புகளையும் பிடித்துக் கீழே தள்ளி, அவனுடைய சிரசின் மேலே காலூன்றி நின்று, அவனுடைய சிரசைத் தன்கை வாளால் பிளந்து மற்ற அங்கங்களையும் சிதைத்து அவனை வதஞ்செய்து பக்த கோடிகளைக் காப்பாற்றினார்.

இது முதல் தேவியார் துர்க்கை வடிவுடன் திருக்கோயில் கொண்டு கிராமங்களைப் பரிபாலித்து வருகிறார். கிராமங்கள் தோறும் துர்க்கையின் கோயில் ஒன்று இல்லாமலிராது. துர்க்கை பூஜை செய்பவர் விசேஷமாக உழவர்களாகவே இருக்கிறார்கள்.

சில ஊர்களில் துர்க்கை மகா உக்ரத்துடன் விளங்குகிறாள். அங்கே அநேக பக்திமான்கள் தவமிருந்து அநேக வரங்களை அடைகிறார்கள். இவை யெல்லாம் நாளைக்கும் நடப்பது பிரத்யக்ஷமா யிருக்கின்றது.

உலகத்தில் அரசன் தனக்குப் பிரதிநிதிகளைத் துணையாகக் கொண்டு இராஜாங்கக் காரியங்களை நடத்துவதுபோல், ஏகனாக விளங்கும் ஜகதீசனும் தானே பல தேவவடிவங் கொண்டு உலகத்தை ரக்ஷிக்கிறான். இதனை யுணராத நவீன நாகரிகர்-கடவுள் ஏகன் என்பதை உணராமல், பல தெய்வங் கொண்டாடுவது மதியீனம் என்று பேசி, உலகத்தில் தெய்வபக்தி செய்பவரைக் கெடுக்கின்றனர். இது அவர்களுடைய மதியீனமாகு மென்பதி லையமில்லை.

தீய பழக்க வழக்கங்கள்

பழக்க வழக்கங்கள் மக்களுடைய வாழ்வை நடத்துவனவா யிருக்கின்றன. ஒருவனுக்கு நல்ல பழக்க வழக்கங்க ளிருக்குமானால், அவன் அவ்வழி பற்றியே நடந்து மேன்மை அடைகிறான்; தீய பழக்க வழக்கங்களிருக்குமானால் அவன் அவ்வழி பற்றியே நடந்து தாழ்வடைகிறான்.

ஆனால் இளமையில் பிடிபடும் பழக்க வழக்கங்கள் எளிதில் மாறுவதில்லை. கெட்ட பழக்க வழக்கங்களிலிருந்து அவற்றை விட்டுவிட முயற்சி செய்தாலும் முடிவதில்லை. சாதாரணமாக, ஒருவன் சுருட்டோ அல்லது கள்ளோ குடித்து வழக்கமுடையவனாயிருந்தாலும், பொடி, வெற்றிலைபோட்டுப் பழக்க முடையவனாயிருந்தாலும் அவ்வழக்கங்களை விடுவதென்றால் அவன் வெகு கஷ்டப்படுகிறான்.

ஒரு வணிகனுடைய மகனும் குயவனுடைய மகனும் இணைபிரியா நேசரா யிருந்தனர். வணிகன் மகன் குயவனுடைய வீட்டிலேயே விளையாடுவான்; குயவனுடைய மகனோடு சேர்ந்து அவனைப்போல் மண் சுமந்து வந்து போடுவான். சட்டி பானையும் செய்வான். ஆனால் தன் வீட்டு வேலையையாவது தங்கள் குலத் தொழிலையாவது கவனிக்கவே மாட்டான்.

அப்பையனுடைய தகப்பனும் "நமது மகன் வயது வந்து பெரியவனானால், வாணியத் தொழிலாகிய எண்ணெயாட்டல், எண்ணெய் விற்றல், முதலியவற்றைக் கவனிப்பான். கவனியாமலிருக்க மாட்டான். குலத்தொழிலை விட்டுவிடுவானா?" என்றெண்ணி மகனைக் கண்டிக்காமலிருந்துவிட்டான்.

இவ்வாறிருக்கையில் வணிகன் மகன் வாலிபப் பருவமடைந்து குடித்தனத்தைக் கவனிக்கத் தொடங்கினான். தான் வணிகர் குலமகன் என்பதை அவன் மறக்கவில்லை. வணிகர் குலத்துக்குரிய வேலைகளையே செய்து அவன் ஜீவனம் செய்துவந்தான்.

ஒரு நாள் அவன் வீட்டுச் செக்கு மாட்டில் ஒன்று இறந்துபோயிற்று. அதனால் அவன் வேறொருவனுடைய வீட்டுச் செக்கில் எண்ணெயாட்டி எடுத்து வர வேண்டியதாயிற்று. அப்பொழுது அவன் குடத்தில் எண்ணெயை நிரப்பித் தன் தலையில் சுமந்துகொண்டு வீட்டுக்கு வந்தான். அந்தோ! என்ன செய்தான்! குடத்தைத் தலையிலிருந்து மெதுவாயிறக்குவதை விட்டுப் பழைய வழக்கப்படி அதாவது மண் பாண்டங்களுக்கு மண் சுமந்து வந்துபோடும் வழக்கப்படி குடத்தைக் கீழே போட்டுவிட்டு, "அப்பாடா" என்றான். எல்லோரும் "என்னே விநோதமிது" என்று பிரமித்தார்கள். வணிகர் குல வாலிபன் "என்ன சொல்வேன் நான்! குயவன் வீட்டுக்கு மண் சுமந்து வந்து போட்ட வழக்கம் இப்போதும் முன்னின்றது. என்ன செய்யலாம். பழக்கம் பொல்லாது" என்று சொல்லி வருத்தப்பட்டான்.

அவரவர் வேலையை அவரவர் செய்வதே தகுதி

ஒரு குடியானவன் வீட்டில் ஒரு சேவலும் ஒரு நாயும் இருந்தன. சேவல் ஒவ்வொரு நாளும் விடியற்காலம் ஒரு ஜாமப்பொழுதிருக்கும்போது வீட்டுக் கூரையின்மேல் ஏறி உட்கார்ந்துகொண்டு கூவுவது வழக்கம். இப்படி அந்தக் கோழி கூவியதும் குடியானவன் தூக்கத்திலிருந்து விழித்து எழுந்து, நாயையும் தன்னுடன் கூட்டிக்கொண்டு தோட்டத்திற்குத் தண்ணீர் இறைக்கப்போவான். இறைத்துவிட்டு விடிந்து ஜாமப்பொழுதிற்கு வீடு திரும்புவான். வீடு சேர்ந்ததும் சேவலை அழைத்துத் தன் மடிமீது வைத்துக்கொண்டு கையால் அதை நன்றாய்த் தடவிக் கொடுத்து "நீ பிரதிதினம் சரியாக விடிய ஒரு ஜாமப்பொழுதிருக்கக் கூவுவதால் நான் தூக்கந் தெளிந்து எழுந்து வயலுக்குப் போகிறேன். வெள்ளாமையைக் கவனிக்கிறேன். வயல் நன்றாக விளைகிறது. அதனால் பசியாற உண்டு உடுத்து வருகிறேன்" என்று சொல்லி, அவன் தன் கையினாலேயே அதற்கு ஆகாரம் போடுவான்; அது உண்ட பிறகு தான் சாப்பிடப் போவான்; அதன்பின் மறுநாள் தான் அதற்குச் சோறு போடுவான்.

தினந்தோறும் இவைகளைக் கவனித்து வந்த நாய் "என்ன ஆச்சர்யம் இது! நாம் விடியற் காலத்திலேயே

விழித்து எழுந்து நம் எஜமானனுடன்கூடத் தோட்டத்திற்குத் துணைபோய், அவன் வரும்போது அவனுடன் திரும்பி வருகிறோம். எஜமானுக்கு ஒரு ஆபத்தும் வாராமல் காப்பதுடன் ராத்திரி வீட்டையும் காத்து வருகிறோம். நமக்கு விடிந்து 10 நாழிகைக்கு ஒரு தொட்டியில் சோற்றைக் கொண்டுவந்து கொட்டுகிறார்கள். ஒரு வேலையும் செய்யாத கோழிக்கோ ஆசார உபசாரத்துடன் எஜமான் வந்ததும் வாராததும் தான்கூடச் சாப்பிடாமல் ஆகாரம் கொடுக்கிறான். இது என்ன விந்தை. ஒரு சிறிதும் பிரையாசைப்படாதவனுக்கு ஆசார உபசாரத்துடன் சாப்பாடு; ஓடி ஆடி உழைப்பவனுக்கு வேண்டா வெறுப்புடன் சோறு. இதற்கு என்ன காரணம் என்று யோசித்தது.

"ஓகோகோ! கோழி விடிய ஜாமப் பொழுதிருக்கும் போதே கூரையேறிக் கூவுவதனால் எஜமானன் விழித்துக் கொள்ளுகிறான். அதனால் ஏற்படும் நன்மையை உத்தேசித்து எஜமானன் கோழியை இவ்விதம் நடத்துகிறான்போலும்! அதன் குரலைவிட நம்முடைய குரல் இளைத்ததா? அது ஒரு ஜாமப்பொழுதிருக்கும்போது கூவினால், நாம் இரண்டு ஜாமப்பொழுதிருக்கும்போதே கத்துவோம். எஜமான் இன்னும் அதிசீக்கிரம் எழுந்து வயலுக்குப் போவான். வயல் இரண்டு பங்கு அதிகமாக விளையும். அப்போது எஜமான் கோழியினிடம் காட்டும் அன்பைவிட அதிகமாக நம்மிடம் அன்பு காட்டுவான். ஆகவே இன்று ராத்திரி கோழி கூவுவதற்கு முன்னாலேயே நாம

கூரை மேலேறி உரக்க ஊளையிட வேண்டும்" என்று தீர்மானித்தது.

இதுவரையில் குறிப்பிட்ட ஒரு வேலையும் ஏற்படாத நாய்க்கு இப்போது வேலை ஏற்பட்டதல்லவா? பகற்பொழுது எப்போது கழியப்போகிறதென்று அது காத்திருந்தது. இரவு வந்ததும் நாய் சந்தோஷமடைந்தது. அது கோழியை முந்த வேண்டுமல்லவா? தூங்கிவிட்டால் பிந்திவிடக் கூடுமென்று கண்கொட்டாமல் அது விழித்திருந்தது. இரண்டு ஜாமம் ஆயிற்று; நாய் ஒரே ஞாபகமாக விழித்துக்கொண்டிருந்தபடியால் அதற்கு அப்போதுவிடியற்காலமாய் விட்டதாகத்தோன்றியது. உடனே கூரையின்மேல் ஏறி உரக்க அது ஊளையிட்டது. அது பாதி ராத்திரியில் இப்படி ஊளையிட்டதும் குடியானவன் திடுக்கிட்டு எழுந்திருந்து, வெளியே வந்து பார்த்தான்; தன் வீட்டுக் கூரைமேலே தன் நாயே ஊளையிடுவதைக் கண்டு "நாய் கூரைமேல் ஏறுவதும்கூடாது; ஊளையிடுவதும் கூடாதே! இது கூரையின்மேல் ஏறி ஊளையிடுகிறது; நமக்கு ஏதோ பெரிய விபரீதம் நேரிடப் போகிறது. இந்த நாயை ஒரு நிமிஷங்கூட உயிருடன் வைத்திருப்பது கூடாது" என்று தீர்மானித்து நாயைக் கூப்பிட்டான்.

நாய் தன் எஜமானன் தன்னிடம் சந்தோஷங்கொண்டு அழைக்கிறான் என்று நினைத்து, மறுபடியும் ஒரு முறை உரக்க ஊளையிட்டுவிட்டுக் கீழே இறங்கியது. ஏற்கனவே திகிலும் கோபமும் கொண்டிருந்த குடியானவன் நாய் மறுபடியும் ஊளையிட்டதில் அதிக ஆக்ரோஷம் கொண்டான்; உடனே ஒரு நல்ல தடி

கொண்டுவந்து, நாய் இறங்கியதும் ஒரே அடியாக அடித்து அதைக் கீழே வீழ்த்தினான். பின் நாய் சற்று நேரத்தில் உயிர் துறந்தது.

குழந்தைகளே! நல்லது நினைத்த நாய்க்கு இக்கதி நேர்ந்ததே என்று நீங்கள நினைக்கக்கூடும். யார் யார் எந்தெந்த வேலையைச் செய்யவேண்டுமோ அவரவர் அந்தந்த வேலையைச் செய்யவேண்டும். கோழிக்கு இயற்கையாகவே அமைந்தது ஜாமத்தில் கூவும் தன்மை. இதனாலே தான் கோழிக்கு "ஜாமக் கோழி" யென்கிற பெயரும் வழங்குகிறது. கோழியினிடம் பொறாமை கொண்டு தனக்கு ஒவ்வாத ஒரு காரியத்தில் தலையிட்டதனால் நாய்க்கு இக்கதி ஏற்பட்டது. ஆகையால் நாம் எந்தக் காரியத்தைச்செய்தாலும் அது நமக்குப் பொருத்தமுடையதா வென்று கவனித்துச் செய்யவேண்டுவ தவசியமாம்.

A. Gopalaratnam Ayyar,
Madras.

அறிஞர்களுடைய திருவாக்குகளில் உன் கவனத்தைச் செலுத்து. அவர்களுடைய நடத்தையைக் கவனியாதே. அவர்களுடைய உபதேசங்கள் சுவரில் வரையப்பட்டிருப்பினும் அவற்றை நீ கற்றுக்கோள். அறிஞரை அலட்சியம் செய்யாதே. அவருக்கு அடங்கியிரு.

நகத்தைக் கடித்துக்கொண்டிருந்த வாத்தியாயரிடம் அருவருப்புக்கொண்ட பையன் அவருக்கு முதுகைக் காட்டிக்கொண்டு உட்கார்ந்தானும் இது சரியல்லவா?

ஹாஸ்யம்

இடம் - ஒரு தெரு.

சிங்காரம் என்பவன் கையிற் பிரம்பு, உடம்பில் பட்டு ஷர்ட், கழுத்தில் காலர் நெக்டைகள், கண்களில் மூக்குக்கண்ணாடி, சிரசில் ரோஜா நிறமுடைய பட்டு, இடுப்பில் க்ளாஸ்கோ மல்லு, காலில் ஸ்லிப்பர்-முதலியன அணிந்து கொண்டு,

"பணமே உன்னாலென்ன குணமே"

என்று பல்லவி பாடி மகிழ்ந்தவண்ணம் செல்லுகிறான்.

மாணிக்கம்—(பின்பக்கமாக வந்து)-அடே, சிங்காரம்! என்ன ஸல்லாப உல்லாஸ வல்லாளனுடைய நடை நடக்கிறாய்?

சிங்காரம்—(திரும்பிப் பெரு மகிழ்ச்சியுடன் பார்த்து நகைத்து) நான் சிங்காரனல்லவா? சிங்கார நடை நடக்கிறேன். பணக்காரனல்லவா? பணத்தின் பெருமையை எண்ணிப் பரமானந்த மடைகிறேன்.

மாணிக்கம்—நீ என்றைக்குமே குதூகல புருஷன். இருந்தாலும் இன்றைக்குக் குதூகலக் கடலில் குளித்தெழுந்தவனைப் போலிருக்கின்றாயே, காரணம்?

சிங்காரம்—காரணமா?(சிரித்து) என் குதூகலத்திற்கு ஏதாவது காரணம் ஏற்பட்டுக்கொண்டே யிருக்கிறது. கேள். வீட்டிலிருந்து பத்தாயிரம் ரூபாயுடன் புறப்பட்டேன், மவுண்ட் ரோட்டில் ஒரு

மோட்டார் கம்பெனியில் பிரவேசித்தேன். அங்கிருந்த ஒரு வெள்ளைக்காரப் பெண், கீச்சுக்குரலில் என்னைப் பார்த்து "What do you want ?" என்று கேட்டாள். நான் "மோட்டார் கார்" என்றேன். அவள் "என்னை அழைத்துக்கொண்டுபோய்ப் பல வண்டிகளைக் காட்டினாள். நான் அசுரர்கள் மோகினி அழகில் மயங்கியது போல் அவள் அழகில் மயங்கி அவளைப் பார்த்துக்கொண்டே என்னையும் மறந்துவிட்டேன். மோட்டார்கார்களே என் கண்களுக்குத் தெரியவில்லை. சற்றுநேரம் பொறுத்து, "ஏ பெண் மயக்கமே விலகு!" என்றதட்டிய வண்ணம் நிதானித்துக்கொண்டு,ஒரு வண்டியைக் காட்டி "விலை என்ன?" என்று கேட்டேன்.

மாணிக்கம்—அபார விலை சொல்வார்களே ?

சிங்காரம்—அவசரப்படாதே; கேள்.

மாணிக்கம்—சரி, அவசரப்படவில்லை; சொல்.

சிங்காரம்—விலை "ஸ்வல்பமாய்ப் பதினாயிரம் ரூபாய் தான்" என்றாள் வாய் கூசாமல்.

மாணிக்கம்—ஆமாம் "சொல்வாள்! பணம் படைத்த மூடர் பெண் மயக்கில் மயங்கி ஏமாறுவார்கள். இதுதான் வழக்கமாயிற்றே.

சிங்காரம்—அந்தக் கூத்தைக் கேள். "பதினாயிரம் ரூபா என்றாளா-பார்த்தேன்-"அப்படியா! மிகவும் சந்தோஷம்" என்று உயரப் பார்த்தேன். அவள் "என் ஆலோசனை? தங்கள் பெருமைக்கு இது தகுதியான வண்டி" என்றாள்.

மாணிக்கம்—ஆம் - இப்படிப்பட்ட சாதுரியங்களெல்லாம் அவர்களுக்குத் தெரியும்.

சிங்காரம்—சிங்காரனிடத்தில் அந்தச் சாதுரியங்களெல்லாம் தலை யெடுக்குமா ?-பார்த்தேன்-மெது வாய்-"தினசரி நடந்து செல்வதே உமது சரீர திடத்திற்கு நல்லது என்று டாக்டர் சொன்னார். அதுபற்றி யோசனை" என்று பின் பேச்சை இழுத்தேன்.

மாணிக்கம்—(சிரித்து) நீ பலே ஆஸாமியாயிற்றே!

சிங்காரம்-"எப்போதுமா" என்று கேட்டாள்-நான் "இப்போது மாத்திரம்" என்று கூறி அந்த நிமிஷமே அந்தக் கம்பெனியை விட்டு வெளியேவந்து, "பணமே! தப்பினாயா-நான் தப்பினாலல்லவா நீ தப்புவதற்கு?" என்று உல்லாச நடை நடக்கிறேன்-என்றான்.

மாணிக்கம்—(கேட்டு) பேஷ்! நீ எமகாதகனாயிற்றே. நீயா வீணே பணம் செலவு செய்கிறவன்?-என்று அவனைத் தட்டிக் கொடுத்து நகைத்தான்.

"ஸத்ஸங்கத்வே நிஸ்ஸங்கத்வம்
நிஸ்ஸங்கத்வே நிர்மோஹத்வம்
நிர்மோஹத்வே நிச்சலதத்வம்
நிச்சலதத்வே ஜீவன் முக்திஹி"

இந்தியாவும் புரொபஸர் மாக்ஸ் மல்லரும்

காலஞ்சென்ற புரோபஸர் மாக்ஸ்மல்லர் அவர்கள்இந்தியாவைப்பற்றிக் கீழ்வருமாறு கூறுகிருர்:-

உலகத்திலுள்ள எல்லாத் தேசங்களிலும், செல்வமும் சீரும் பொலிந்து விளங்குவதும், தெய்வலோகத்தை யொத்த இயற்கை அழகு அமையப் பெற்றதுமான தேசமேது வென விரும்புவோர்கட்கு இந்தியாவே இப்பெருமை வாய்ந்துள்ளதெனக் குறிப்பிடுவேன். இந்த அவனியில் தெய்வசக்தி பொருந்திய மனோவாற்றலும் வன்மையுங் கொண்டவர்களாயும் உலக வாழ்க்கையின் சாரத்தை நன்குணர்ந்தவர்களாயு முள்ள மானிடர் வாழும் தேசம் எதுவென்ருல் இந்தியாவே என்பேன். இந்த ஐரோப்பாவில் நாம் நமது அக வாழ்க்கையைச் சீர்ப்படுத்தி, நித்தியானந்த வாழ்க்கைக்குரிய வழி, உலக சம்மதமான வழிகளில் சுத்தமான நெறிகளைக்கொண்டு இனிது காலங் கழிக்க எண்ணி, அதற்குத் தக்க நூற்களை ஆராய்ந்தறிய விரும்புவோமானுல் இந்தியாவில் வழங்கும் நூற்களையே குறிப்பிட்டுக் காட்டுவேன். நீங்கள் காவியம், மதம், வேதாந்தம், இதிகாசம், சட்டம், ஐதீகம், கலை, சாஸ்திரம் இவைகளில் எந்த விஷயத்தைப்பற்றி விசேஷமாகப் படிக்க விரும்பினுலும் உங்களுக்கு மனமில்லாவிடினும் இந்தியாவில் ஒவ்வொரு இடத்திற்கும்போய் அவர்கள் சரிதங்களிற் பொதிந்துள்ள அரும் விஷயங்களை அறிந்துகொள்ளவேண்டும். இதற்குச் சிறந்த தனம் போன்ற அரிய பொருள்களை வெளியிடக்கூடியது இந்தியா ஒன்றே.

“ஹிந்து”



பண்டித ஜவஹரிலால் நேரு

210782
600 008

பண்டித ஜவஹரிலால் நேரு

அவரது சரித்திரச் சுருக்கம்

சென்றமாத இறுதியில் லாகூரில் கூடிய 44-வது அகில இந்திய தேசீய காங்கிரஸின் தலைவர் பண்டித ஜவஹரிலால் நேரு 1885-ஆம்வருஷத்தில் அலகாபாத்தில் பிறந்தார். அவர், தேசமெங்கும் புகழ் பெற்ற பண்டித மோதிலாலின் ஏகபுத்திரர். அவருடைய வாலிபத்தில் அவருக்குத் தக்க கல்வி அளிப்பதில் அவரது தந்தை சிறிதும் பின் வாங்கவில்லை. 1905-ம் ஆண்டில் ஜவஹரிலால் இங்கிலாந்துக்குச் சென்று 1912-ஆம் ஆண்டு வரை பல கல்லூரிகளிலும் படித்துத் தேர்ந்தார். அவர் இங்கிலாந்தில் தங்கியிருந்தபோது, இந்தியாவின் விஷயங்களில் மிக்க கவனம் செலுத்தி வந்தார். 1913 முதல் 1920 வரை அலகாபாத் ஹைகோர்ட்டில் பிரபல வக்கீலாக விளங்கினார். 1920-ல் ஒத்துழையா இயக்கத்தை முன்னிட்டுத் தம் தொழிலை விட்டுவிட்டார். அவர் வக்கீலாக இருந்தபோதும், பல பொதுஜன ஊழிய இயக்கங்களில் கலந்துகொண்டு வேலை செய்தார். 1914-ல் ஸ்ரீ கோகலேயின் வேண்டுகோளுக் கிணங்க 40-ஆயிரம் ரூபாய் வசூல் செய்தார். 1917-ல் டாக்டர் பெஸன்டின் ஹோம் ரூல் இயக்கத்தில் கலந்து கொண்டார். 1919-ல் தமது தந்தையால் ஆரம்பிக்கப்பட்ட

"இண்டிபென்டென்ட்" என்னும் பத்திரிகைக்குப் பல அரிய வியாசங்களையும் எழுதினார். அவர் ஒத்துழையா இயக்கத்தில் தீவிரமாக வேலை செய்தபோது இரு முறை சிறைக்குச் சென்றார். நாபா சமஸ்தானத்தில் ஒரு முறை சிறை சென்றார்.

1923-ம் வருஷம்முதல் காங்கிரஸ் பொதுக் காரியதரிசியாக இருந்து பல நிர்மாண வேலைகளையும் ஒழுங்காகச் செய்து வருகின்றார். சென்ற ஆறு வருஷங்களுக்குள் அவர் பல ராஜீய, சமூக, பொருளாதார, தொழிலாளர் மகாநாடுகளில் தலைமை வகித்திருக்கிறார். தொழிலாளர்களாலும், இளைஞர்களாலும் நன்கு மதிக்கப் பெற்றவர்; 1926-27-ல் அவர் ஐரோப்பாவில் சுற்றுப் பிரயாணம் செய்து இந்தியாவின் விஷயங்களைப்பற்றிப் பல பொது மேடைகளில் பேசியுள்ளார். 1928-ல் அவர் பல இந்தியப் பத்திரிகைகளில் சோவியத் ருஷ்யாவின் உயர்ந்த அரசியல் முறைகளைப்பற்றி எழுதி யுள்ளார். 1927-ல் சென்னையில் காங்கிரஸ் கூடியபோது பூரண சுயேச்சைத் தீர்மானம் கொண்டுவந்தார். அன்று முதல் இன்றுவரை அக் கொள்கையிலேயே நம்பிக்கை யுடையவராக இருக்கின்றார்.

நாயகர் லக்ஷமடி எனக்கது ஆயிர லக்ஷமடி என்றார்
கற்புடைய மங்கை.

நாயகர் லக்ஷமடி-எனக்கது ஆயினும் லக்ஷியமில்லை-என்றாள்
நாடோடி நங்கை.

பதினோராம் ஆண்டின்

பாலவிநோதினியின் சீலமும் சிறப்பும்

உலக மதனில் நிலவிய மக்கள்
பலதுறை தெரிந்து நலமடைந் துய்வான்
அருந்தவம் புரிந்து வருந்தியே இறைவன்
அருளால் அடைந்த பொருளாம் இதுவென
அகமும் மகிழ்ந்து முகமும் மலர்ந்து
ஆசையாய்ப் போற்றி நேசமாய் வளர்க்கும்
குழந்தைகள் தமக்குப் பழந்தமிழ் முதலிய
கல்விகற் பித்துச் செல்வமும் உயர்வும்
பெறவைத் திடவே பெரிதும் அவாவுர்— ஆகவே:
ஜெகத்தவர் புகழும் அகத்தியர் அருளிய
அமிழ்தினும் இனிய தமிழ்மொழி யதனை
நந்தே சத்தவர் சொந்தமாய்ப் பார்ப்பது
இயற்கை; அதுதான் நயக்கை வாய்க்கென—
அந்த இனிய செந்தமிழ் மொழியில்
உலகம் இன்னதென் றுணர்வதற் குரிய
நெறிகள் பலவும் நிறைந்திருத் தலினால்
அவ்வுபா யத்தைச் செவ்விதி னறிந்த
வரகவி சுப்பிர மணியபா ரதியார்
குழந்தை களுக்குக் குணமும் மணமும்
அறிவும் நிறைவும் ஆக்கமும் ஊக்கமும்
அளிக்கவும் அவர்கள் களிக்கவும் துணிந்து
பால விநோதினிப் பத்திர மொன்றைப்
பாரோர் பரவப் பதிப்பித் தனர்காண்;

இத்தமிழ்ப் பத்திரம் இந்நெடும் புவியில்
தோன்றி விஜயம் துலங்க வுலாவி
ஐயிரு வருடம் அன்பொடு கழித்தது;—இனி,
பதினோ ராவது புதிய ஆண்டையும்
எட்டிப் பார்க்க இன்புறு கின்றது;
இதுவரை நம்மை இசைபெற வளர்த்தோர்
இனியும் கைவிடா திருந்து முன்னிலும்
தாழ்விலா நமது வாழ்வில் ஆர்வம்
தழைப்ப ரென்றே அழைக்க வருகுது;
தன்முது நேசம் தன்னை நினைந்தே
புன்முறு வலும்நனி பூத்திருக் கின்றது
குழந்தைகள் தமைத்தன் குடங்கையார
அணைத்தொரு முத்தம் அளிக்கவும் மேவுது;
இன்னும் வேண்டிய இன்போ தத்தைப்
பன்னயம் ததும்பப் பரிந்துத வுவனென்
வரவை யேற்பீர் பரவவும் வைப்பீர்
என்று நம்மை இனிதுகேட் கின்றது;
இத்தகை அற்புத பத்திர மதனை
ஆதரிப் பதுநம தருட்கடன் ஆமால்;
வாழிய பால விநோதினி வாழி
வாழி யதனை வாசிக்கும் குழந்தைகள்
வாழி யதன் ஆசிரியரும் வாழி
வாழி யதைஆ தரிப்பவர் வாழி
வாழிய மண்ணகம் வானகம் வாழியே,

ம. இராஜகோபாலன்,
வித்வான் கோமளபுரம்.

அதிக ஆசை அதிக நஷ்டம்.

ஓர் ஊரில் முத்தையன் குமரேசன் என்னும் இரண்டு குடியானவர்கள் சேர்ந்து விவசாயம் செய்து கொண்டு வந்தார்கள். ஒரு நாள் நிலத்தை வெட்டிக் கொண்டு போகும்போது நிலத்தில் ஒரு புதையல் தென்பட்டது. உடனே இருவரும் அளவிலா மகிழ்ச்சி யடைந்தனர். "இது பகல் நேரமாகையால் நாம் இப்போது இப்புதையலைத் தோண்டி யெடுப்போமாகில் யாராவது பார்க்கக் கூடும். பார்த்து விட்டால் தொந்தரவாக முடியும். ஆகையால் அஸ்தமித்து ஒரு ஜாமத்துக்குமேல் நல்ல இருட்டில் வந்தோமானால் தோண்டி எடுத்துக்கொண்டு போகலாம். நாம் இருவரும் சரியாகப் பிரித்தெடுத்துக்கொண்டு சுகமாக வாழலாம்" என்று யோசித்து அந்த இடத்தை அடையாளமாக மூடிவிட்டு இருவரும் வீடு போய்ச் சேர்ந்து, அஸ்தமன காலத்தை எதிர்பார்த்தவராய் இருந்தனர் அவர்களுக்கு அன்று பகற்பொழுதைக் கழிப்பது வெகு கஷ்டமாயிருந்தது.

இந்தச் சமயத்தில் முத்தையன் தனக்குள் "நாம் இருவரும் சேர்ந்துபோய்ப் புதையலை எடுத்துக் கொண்டு வந்தால் குமரேசனுக்குப் பாதிப் பங்கு கொடுக்க நேரிடும். அதை முழுதும் நாமே அடைந்தோமானால் வெகுகாலம் நம் பிள்ளை பிள்ளை தலைமுறைக்கும் சுகமாக வாழலாம். இதற்கு ஒரு யுக்தி செய்து

அவனை ஏமாற்றி நாமே அடைய வேண்டும்" என்று நினைத்தான். முத்தையன் புத்தி நுட்பமுள்ளவனுகை யால் உடனே அவனுக்கு ஒரு யுக்தி தோன்றியது. "நம்முடைய பெண்ணுக்கு உடம்பு சௌக்கியமில்லை யென்றும், உடனே புறப்பட்டு வரும்படி அவசரமாக அயலூரிலிருந்து ஆள் வந்திருக்கிறபடியால் போய்ப் பார்த்துவிட்டு உடனே திரும்புகிறேன். நான் வந்ததன் மேல் போய்ப் புதையலை எடுத்துக்கொண்டு வரலாம் என்று சொன்னால் அவன் நம்புவான். இவ்விதமாகப் போக்குக் காட்டிவிட்டு நாம் அயலூருக்குப் போகிற மாதிரி போய், இருட்டியவுடன் முதல் ஜாமத்திலேயே புதையலை எடுத்துக்கொண்டு வந்து பத்திர படுத்தி விட்டு பின்புப் அவனையும் கூட்டிக்கொண்டு வயலுக்கு போய், ஐயோ! புதையலை யாரோ எடுத்துக்கொண்டு போய்விட்டார்களே! என்று ஒன்றும் தெரியாதவன் போல் நடித்தால் அவன் நம்மை நம்பிச் சும்மா வீடு திரும்பிப் போய்விடுவான். இதுதான் தகுந்த யுக்தி" என்று தீர்மானித்தான்; புதையல் எடுத்துக்கொண்டு வந்துவிட்டதாகவே நினைத்தான்; ஒரு குதி குதித் தான்; உடனே குமரேசனிடம் போய் விஷயத்தைச் சொல்லித் தனக்கு விடையளிக்கும்படி கேட்டான். குமரேசன் "வெளுத்ததெல்லாம் பால் கறுத்ததெல் லாம் தண்ணீர்" என்று கருதும் சுபாவமுள்ளவன். முத்தையன் குமாரத்திக்கு உடம்பு அசௌக்கிய மென்று கேட்க அவன் மிகவும் மனம வருந்தினன்; "முத்தையா! போய் வா! அதற்கென்ன? நீ வந்த பிறகேபோய் எடுத்து வரலாம்" என்று சொன்னன்

குமரேசன் யாதொரு தடையும் சொல்லாமல் தனக்கு விடை கொடுத்ததையே ஒரு நல்ல சகுன மாகக் கொண்டு முத்தையன் தன் வீட்டுக்கு வந்து, தன் பெண்சாதியை யழைத்து விஷயத்தைச்சொல்லி யார் வந்து கேட்ட போதிலும் தான் அயலூர் போயிருப்பதாகச் சொல்லும்படி திட்டப்படுத்தி விட்டு, பொழுதிருக்கும்போதே புறப்பட்டான். புறப்பட்டவன் ஊருக் கருகாமையிலுள்ள ஒரு காட் டை யடைந்தான்; மனித சஞ்சாரம் அதிகமா யில் லாத மரங்களடர்ந்த ஓரிடத்திற்குப் போய் உட் கார்ந்தான். அஸ்தமிக்க இரண்டு நாழிகைப்பொழு திருந்தது. புதையலைத் தானே சீக்கிரம் கைப்பற்ற வேண்டு மென்கிற ஆவலுடையவனுகையால் முத்தை யனுக்கு அஸ்தமிக்க ஜாமப்பொழுதிருக்கும்போல் தோன்றியது. அப்போது அவன் சூரிய நாராயண மூர்த்தியைச் சீக்கிரம் மறைந்து போகும்படி யாகப் பிரார்த்தித்தான்; தன் காரியத்திற்கு சாதக மாக விருக்கப்போகும் இருளைச் சீக்கிரம் வரும்படி வேண்டினன்; ஒவ்வொரு நிமிஷத்தையும் அவன் ஒவ் வொரு யுகமாகக் கழித்துக்கொண் டிருந்தான். சூரிய பகவானும் இவன் படும் அவஸ்தையைக் கண்டு மனம் தாளாதவராய் மேற்குத் திசையில் மறைந்தார். முத் தையனும் சந்தோஷ மடைந்தான்; இருளைப் போற் றினன். குமரேசனுக்குத் தெரியாமல் தான் புதைய லைக் கைப்பற்றி வீட்டுக்குப் கொண்டுபோக அநுக் கிரகம் செயதால் தன் குல தெய்வத்துக்கு இரட் டைக் குட்டி வெட்டிப் பொங்கலிட்டுப் பூசை போடு வதாக வேண்டிக்கொண்டான். அஸ்தமித்து அரை

ஜாமப் பொழுதாயிற்று. காட்டில் நரிகள் ஊளையிட்டுக் கொண்டு புறப்பட்டன. அது முத்தையனை "இனித் தாமதியாதே; நாழிகையாய் விட்டது. இனி இருந்தால் குமரேசன் தேடிக்கொண்டு வந்தாலும் வருவான்; சீக்கிரம் இதை விட்டுப் புறப்படு" என்று தூரத்தியதாக இவன் மனதில் பட்டது. உடனே அவன் காட்டை விட்டுப் புறப்பட்டு வயலை நோக்கி நடந்தான். பெருநிதியை அடையப்போகும் ஆசையில் ஈடுபட்டுள்ள முத்தையனுக்குச் சமீபத்திலுள்ள வயலும் வெகு தூரத்திலிருப்பதாகத் தென்பட்டது. கடைசியில் அவன் வயலை யடைந்தான். அவனுக்கு அப்போது பாதி ராத்திரியாய் விட்டதாகத் தோன்றியது. குமரேசன் தேடிக்கொண்டு வந்து விட்டால் இவ்வளவு பிரயாஸ்சையும் வீணாய் விடுமே என்கிற பீதியை அவன் மனத்தில் கொண்டான். அங்கு அகஸ்மாத்தாக உண்டான சப்தம் இவனுக்குக் குமரேசன் காலடிச் சப்தம் போலத் தோன்றியது. குமரேசன் வழக்கமாக வீட்டிலிருந்து வரும் திசையை உற்று நோக்கினான். யாரோ வருவதாக இவன் கண்ணுக்குப் புலப்பட்டது. "ஓ! குமரேசன் தான். வருகிறான். நாம் இங்கிருப்பது கூடாது. இபபடி ஒரு பக்கம் ஒளிந்திருந்து அவன் என்ன செய்கிறான், பார்ப்போம். நம்மை விட்டுவிட்டுப் புதையலைத் தோண்டியெடுத்தாலும் எடுப்பான். அப்படி யெடுத்தால் உடனே வந்து பிடித்துக்கொள்வோம்" என்று அவன் எண்ணினான்; சற்றுப் பின்னடைந்து மறுபடியும் உற்று நோக்கினான். இப்போது முன் தோன்றிய உருவம் இவனுக்குத் தோன்றவில்லை. நிஜ உருவம் இருந்தாலல்லவோ தோன்றப் போகிறது! 'அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்பது போல் இவன் மனதிலுண்டான பீதியே எதிரில் உருவமாகத் தோன்றியது. பின் அவன் தன்மனதைத் திடப்படுத்திக்கொண்டு உட்கார்ந்து தோண்ட ஆரம்பித்தான். தனக்குப் பின்னால் குமரேசன் வந்து நின்றது போல அவனுக்குத் தோன்றியது. அவன் திகிலடைந்தான்; பின்னால் திரும்பிப் பார்த்தான்; ஒருவருமில்லை; இவ்வித பீதியுடன் கை கால் ஓடாமல், புதையலை வெட்டி எடுத்து நன்றாகத் துணியைப் போட்டு மூடிக் கட்டி எடுத்துத் தலையில் வைத்துக்கொண்டு முன் வந்த வழியேபோய் அயலூரிலிருந்து வருபவன்போல் ஊருக்குள் வந்து தன் வீட்டிற்குள் பரபரப்புடன் நுழைந்தான். தன் மனைவியை யழைத்து, மெல்லிய குரலுடன் "குமரேசன் தேடிக்கொண்டு வந்தானா?" என்று கேட்டான்.

குமரேசனைவிட முத்தையன் பலத்திலும், புத்தியிலும், மேம்பாடுடையவனா யிருந்தும்; முத்தையன் தப்பிதம் செய்தவனாகையால் இவனுடைய அழுக்கடைந்த மனோபாவம் இவனைப்பலவித ஹிம்சைக்கு உள்ளாக்கியது. குமரேசன் வரவில்லை யென்று தெரிந்து "இனி யார் வந்த போதிலும் பயமில்லை! ஜெயித்தோம்! இவ்வளவு சொத்தும் நம்முடையதே! நம்ம சாமி நம்முடைய பங்கிலிருந்து நம்மை வீடு கொண்டு வந்து சேர்த்தது." என்று மனம் பூரித்தான்; மேலே ஏதோ சொல்ல வாயெடுத்தான். நாவெழவில்லை.

அவன் அதிக சந்தோஷத்தில் மூழ்கியிருக்கிறானல்லவா? புதையலைக் கீழே வைத்தான். சற்று நேரம் மௌனமாக இருந்தான். பிறகு தெருக்கதவைத் தாளிடும்படியாக மனைவிக்கு அவன் ஜாடை செய்தான். இவன் பேச முடியாமல் தவித்ததையும், உடனே கை ஜாடை செய்ததையும் கண்ட இவனுடைய மனைவி தன் புருஷனுக்கு ஏதோ வியாதி திடீரென்று வந்துவிட்டதென்று பயந்தாள். அவன் சொன்னது விளங்கவில்லை. சீக்கிரமாகப் புதையலை பந்தோபஸ்து செய்ய வேண்டுமென்று எண்ணித் தானே போய்க் கதவைத் தாளிட்டான். அது சரியாகத் தாளிடப்பட்டதா இல்லையாவென்று கவனிக்குமுன் புதையலைப் பந்தோபஸ்து செய்யவேண்டிய அவசரம் இவனைத் தூண்டியதால் சரியாகத் தாளிடப்பட்டதாக நினைத்துக் கொண்டு உள்ளே வந்து புதையலை ஓரிடத்தில் பந்தோபஸ்து செய்ய யோசித்தவனாய் உலாவினான். இதைக் கண்ட அவன் மனைவிக்குப் பயம் அதிகரித்தது. அவள் தன் கணவனிடம் வந்து "என்னாங்க! என்னமோ சொல்ல வந்தீங்க; அப்படியே முளிச்சுக்கிட்டு நின்னீங்க; தெருவண்டை போனீங்க; வந்தீங்க; எப்படியோ பாத்துக்கிட்டு அங்குமிங்கும் பூட்டு வரிங்களே; உடம்பு என்னாங்க? இந்த எளவு பொதையலோடு ஏதாவது பூதம் கீதம் தொடந்து வந்துட்டுதோ என்னவோ. பொதயலும் வாண்டாம், கிதையலும் வாண்டாம். இந்தச் சனியனை யாருக்காவது குடுத்துடுங்க. கையோடையும் காலோடையும் பொளச்சிக்கிலாம்" என்றாள். வரும்,

அ. கோபாலரத்தினம்.

மோட்டாரை இயக்கப் புகையை உபயோகித்தல்

அமெரிக்க நிபுணரின் ஆராய்ச்சி.

சோளத்தட்டை, குப்பை முதலியவற்றிலிருந்து ஒருவகைப் புகையை உண்டாக்கி அதனைக்கொண்டு நகரங்களில் எங்கும் விளக்கு ஏற்றவும், மோட்டார்கள் ஓட்டவும் மற்றும் பலவித வேலைகள் செய்யவும் அமெரிக்க ஆராய்ச்சி நிபுணர்கள் ஏற்பாடுகள் செய்திருக்கின்றனர். அமெரிக்காவைச் சேர்ந்த இலினாயிஸ் சர்வகலாசாலையின் ரசாயன ஆராய்ச்சி சாலையிலுள்ள நிபுணர்கள் சிலர் சோளத்தட்டையிலிருந்து "மித்தேன்" என்னும் புகை எடுப்பதைக் கண்டு பிடித்திருக்கின்றனர். இப்புகையை மோட்டார்கள் ஓட்டுவதற்கு உபயோகிக்கக் கூடுமென்றும், இப்புகையினால் மின்சார சக்தியைச் சிருஷ்டிக்கும் பெரும் இயந்திரங்களைச் செலுத்த முடியுமென்றும் கண்டு பிடித்திருக்கின்றனர். இந்த ஆராய்ச்சி நிபுணர்கள் கண்டு பிடித்துள்ள நூதனமான கருவியைச் சாதாரணமான விவசாயியும் தன் வீட்டில் அமைத்து அதன் மூலமாக வீணாய்ப் போகும் சோளம் முதலிய தானியத் தட்டைகளைக் கொண்டு புகையுண்டாக்கி அதனை விளக்கு ஏற்றவும் சமையல் செய்யவும் உபயோகித்துக் கொள்ளலாமென்றும் அறிவிக்கப்படுகின்றது. இந்நூதன முறையை டாக்டர் ஏ. எம். புஷ்வெல் என்பவரும், அவருடைய உதவி ஆசிரியரான ஸி. எஸ். போரப்பும் கண்டு பிடித்திருப்பதாய்த் தெரிகின்றது.

இந்நூதன புகைக்குத் தேவையான வஸ்து தானியமடிக்கப்பட்ட தட்டைகள் தான். தட்டைகளைச் சாதாரணமாகப் பொடியாக நறுக்கி வேகவைத்துப் பிறகு தண்ணீரிலாவது அல்லது சுண்ணும்பிலாவது ஊறவைக்கவேண்டும். இதற்குத் தேவையான கருவி இவ்வாறு ஊறவைக்கும் தட்டையிலிருந்து வெளிப்படும் புகையைச் சேகரித்து வைக்கும் மூடியுடன் கூடிய சிறு தொட்டிதான். எட்டடிக்கு எட்டடி அகலமும் உயரமும் உள்ள தொட்டியில் சோளம் முதலிய தானியத் தட்டைகளிலிருந்து கிடைக்கும் புகையைக் கொண்டு ஐந்தாறு பேருள்ள குடும்பத்திற்குச் சமையலுக்கும் விளக்கு எரிக்கவும் மற்ற தேவைகளுக்கும் அவசியமான அளவுக்குச் சரிகட்டிக் கொள்ளலாமெனச் சொல்லப் படுகின்றது. எட்டுமைல் சுற்றளவுள்ள நிலத்தில் சாகுபடியாகும் சோளத் தட்டையிலிருந்து எடுக்கப்படும் புகையினால் 80,000 ஜனங்கள் வசிக்கும் நகரின் புகை சம்பந்தமான சகல தேவைகளையும் ஈடுசெய்யப் போதியதாகுமென்றும் அறிவிக்கப்படுகின்றது. புகை எடுக்கப்பட்ட சோளத்தட்டையும் வீணாய்ப்போவதாய்க் காணவில்லை. புகை எடுக்கப்பட்ட பின் தொட்டியில் தேங்கிக்கிடக்கும் தட்டைகளைக் காகிதம் செய்வதற்கு உபயோகிக்கக் கூடுமென்றும் தெரிகிறது.

"எனக்கு அடங்கியிருந்த என் தங்கை எனக்குச் சம்பந்தியாளுள். பின் நான் அவளுக்குப் பயப்பட வேண்டியதாயிற்று"-என்றான் பெண்ணைப் பெற்றவன்.

பக்தி

(ஆசிரியப்பா.)

சிரவணம் கீர்த்தனம் ஸ்மரணம் சேவையோ
டருச்சனை வந்தனம் அருந்தாஸ் யஞ்சக்யம்.
ஆத்ம நிவேதனம் ஆகிய ஒன்பதும்,
பக்தியின் நெறியெனப் பகர்ந்தனர் பெரியோர்;
ஞானியும் கர்மியும் நானிலந் தன்னில்
பக்தியா லேயே பரகதி பெறுவர்;
எல்லோர் தமக்கும் பக்தி யுரியதாம்,
வல்லோர் வாயிதை வகுப்புறக் கேண்மின்;
துருவனும் பிரஹ்லா தனும்பக் தியினால்
பெரும்பே றுற்ற பெற்றிய தோர்ந்தால்
பக்தியைச் செய்து முக்தியைப் பெற்றிட,
வயதுகா ரணமாம் நியதியே யில்லையால்;
ஈசனைத் துதிப்பதால் நேசமா யீசற்
குறுபய னென்று மூலகினி விலையால்;
பக்தியிற் கடவுளைப் பாவினால் மனது
சுத்தியாய் ஆத்மா நித்தியந் தோன்றுவர்;
உறு பெறும் பேறு வேறெதா மிதனில்?
பரகதி யென்று பகர்வதே யிதுவால்;
விடயப் பற்றினால் அடைவது பயமாம்
கடவுளைப் போற்றினால் கவலை ஒழிந்திடும்
அப்பரும் பிரஹ்லா தவனும் ஈற்றி
லொப்பிலா வெற்றி யுற்றதை யோர்மின்;
ஆதலி னவனடி யகத்தினிற் சேர்த்துப்
பேதமி லாப்பதம் பெற்றிடு வீரே.

பண்டிதர் - சே. ரா. கணபதி சுப்ரமண்ய ஐயர்.

பிறர் கோபமடையும்படி பேசுவ தாகாது.

ஒரு நாள் தொண்ணூறு வயது அந்தணரொருவருடைய தந்தைக்குத் திதி வந்தது. அன்று வழக்கப்படி அவ்வீட்டு மருமக்களும் ஏனையரும் கவனிக்கவேண்டிய அலுவல்களைக் கவனித்து வந்தார்கள். அக்கிழவருடைய மனைவியாகிய தொண்டுக் கிழவியும் தன்னாலியன்ற அலுவல்களைச் செய்து கொண்டிருந்தாள்.

அக்கிழவருக்கு இரண்டு பிள்ளைகள். அவர்களிருவரும் வெளியே போயிருந்தனர். கிழவர் மாத்திரம் வீட்டிலிருந்தார். அப்படி யிருக்கையில் கிழவியின் மருமகள் ஒருத்தி மாமியாரைப் பார்த்து, "நீங்களும் உங்கள் கணவனாரும் திதி செய்து கொண்டேயிருந்தால், நீங்கள் எப்பொழுது சாவது, நாங்கள் எப்பொழுது உங்களுக்குத் திதி பண்ணுவது?" என்று வார்த்தைகளைச் சுளிக்கச் சொன்னாள்.

அதனால் கிழவி மனஸ்தாபமும் கோபமும் கொண்டு, "இதோ இன்றே சாகிறேன். சுகமாய்த் திதிசெய்" என்று கூறிக்கொண்டே எழுந்து போய்ப் புழக்கடைக் கிணற்றில் திடீரென்று விழுந்து விட்டாள். நான்குபேர் கூடி எடுப்பதற்குள் கிழவி உயிர் துறந்தாள். கிழவி மரணமடைந்தது தன் மருமகளால் என்பது எல்லோருக்கும் தெரிந்துவிட்டது. எல்லோரும் அவளை ஏசுவாராயினர் இதனால் கிழவரின் இரண்டு பிள்ளைகளும் அவமானமென்கிற கடலில் மூழ்கினார்கள்.

சுளிக்கச் சொல்லேல்

சுளிக்க—(கேட்டவர்) கோபிக்கும்படி அல்லது மன வருத்த மடையும்படி, சொல்லேல்—நீ வார்த்தை பேசாதே. (சோமாஸ்கந்தன்.)

பிறர் கோபமடையும்படி பேசுவதாகாது.

ஒரு நாள் தொண்ணூறு வயது அந்தணரொருவருடைய தந்தைக்குத் திதி வந்தது. அன்று வழக்கப்படி அவ்வீட்டு மருமகளும் ஏனையரும் கவனிக்கவேண்டிய அலுவல்களைக் கவனித்து வந்தார்கள். அக்கிழவருடைய மனைவியாகிய தொண்டுக் கிழவியும் தன்னாலியன்ற அலுவல்களைச் செய்து கொண்டிருந்தாள்.

அக்கிழவருக்கு இரண்டு பிள்ளைகள். அவர்களிருவரும் வெளியே போயிருந்தனர். கிழவர் மாத்திரம் வீட்டிலிருந்தார். அப்படியிருக்கையில் கிழவியின் மருமகள் ஒருத்தி மாமியாரைப் பார்த்து, "நீங்களும் உங்கள் கணவனும் திதி செய்து கொண்டேயிருந்தால், நீங்கள் எப்பொழுது சாவது, நாங்கள் எப்பொழுது உங்களுக்குத் திதி பண்ணுவது?" என்று வார்த்தைகளைச் சுளிக்கச் சொன்னாள்.

அதனால் கிழவி மனஸ்தாபமும் கோபமும் கொண்டு, "இதோ இன்றே சாகிறேன். சுகமாய்த் திதிசெய்" என்று கூறிக்கொண்டே எழுந்து போய்ப் புழக்கடைக் கிணற்றில் திடீரென்று விழுந்து விட்டாள். நான்குபேர் கூடி எடுப்பதற்குள் கிழவி உயிர் துறந்தாள். கிழவி மரணமடைந்தது தன் மருமகளால் என்பது எல்லோருக்கும் தெரிந்துவிட்டது. எல்லோரும் அவளை ஏசுவாராயினர் இதனால் கிழவரின் இரண்டு பிள்ளைகளும் அவமானமென்கிற கடலில் மூழ்கினார்கள்.

சுளிக்கச் சொல்லேல்

சுளிக்க—(கேட்டவர்) கோபிக்கும்படி. அல்லது மன வருத்தமடையும்படி, சொல்லேல்—நீ வார்த்தை பேசாதே. (சோமாஸ்கந்தன்.)

ஹரே ஸ்ரீ கிருஷ்ணா குழலூது

—:(o):—

நாடு விளங்கக் குழலூது நல்லார் விளங்கக் - குழலூது
வீடு விளங்கக் குழலூது-வீரர் விளங்கக் குழலூது
மாடுகளிக்க மயில்களிக்க-மங்கை கோபியர் மனங்களிக்கக்
காடு களிக்கக் குழலூது-கண்ணா ஊது குழலூது-
மணி-வண்ணா ஊது குழலூது-

இல்லைதெய்வமில்லை யென்பார்-இருமாப்படங்கக் குழலூது
தில்லையுண்டு வழிபாடு-செய்ய என்று குழலூது
எல்லைகடந்து திறம்பேசும்-இழிஞரடங்கக் குழலூது
கல்லை யெடுத்து மழை தடுத்த-கண்ணா ஊது குழலூது
மணி-வண்ணா ஊது குழலூது.

ஞானந்திகழக் குழலூது-நன்மை பெருகக் குழலூது
தானம் விரும்பக் குழலூது-தவமிக் கிலகக் குழலூது
வானம் வழங்கக் குழலூது-மன்னன் விளங்கக் குழலூது
கானந்தழைக்கக் குழலூது-கண்ணா ஊது குழலூது
மணி-வண்ணா ஊது குழலூது

மரபிணொழுக்கம் பிழையாத-மறையோன் கொடுத்த அவலுண்டு
திருவும் இல்லும் பெறவளித்த-தேவர் தலைவா குழலூது
சரணம் சரணம் எனவழைத்த-தையல் ஐவர் மனைவிக்குக்
கருணைபுரிந்து துகிலளித்த-கண்ணா ஊது குழலூது
மணி-வண்ணா ஊது குழலூது.

முன்னோர் முறைமை இகழ்ந்துமகிழ்-மூடர் அடங்கக் குழலூது
தன்னேரில்லாத் தமிழ் நாடும்-சங்கம் விளங்கக் குழலூது
நன்னோர் வழிசெல் பாரதி சொல்-நாட்டில் விளங்கக் குழலூது
கன்னோர் புயங்கொள் வீரர் புகழ்-கண்ணா ஊது குழலூது
மணி-வண்ணா ஊது குழலூது.

வரகவி-திரு-அ. சுப்ரமண்ய பாரதி.

புத்தக வரவு.

1. சென்னைப் புத்தகாலயப் பிரசுர சங்கத்தாரால் பிரசுரிக்கப்பட்ட ஷை புஸ்தகாலயத்திற்குரிய தமிழ் நூல்களின் முதல் அட்டவணை, ஷை புஸ்தகாலயத்தின் அங்கத்தினர்களடங்கிய புஸ்தகம், ஷை புஸ்தகாலயம் இன்றியமையாதது என்பதை எடுத்துக்காட்டும் வியாஸங்களடங்கிய புத்தகம் - ஆகிய இவைகள் வரப்பெற்றோம். பார்வையிட்டதில், இந்த ஆலயத்தின் நோக்கம்-நம் நாட்டில் கல்வியின் அபிவிருத்தியைச் சிறு கிராமத்திலும் பரவச் செய்வதற்குரிய வழியிலிருப்பதாகத் தெரிகிறது. இந்த முயற்சியில் செல்வவந்தர்களும், அறிவாளிகளும் பெரியார்களும் ஈடுபட்டிருப்பதாகவும் அறியலானோம். இந்த முயற்சி ஒரு சிறந்த முயற்சியென்று பலரும் அபிப்பிராயப் பட்டிருக்கிறார். நாமும் அவ்வாறே கருதுகிறோம். இதன் நோக்கம் இனிது நடைபெற இறைவன் கருணை புரிவானாக!

2. சென்னை திருவல்லிக்கேணி, ஹிந்தி பிரசார ஆலயத்திலிருந்து-மந்திரமகிமையெனச் சிறு புத்தகம் ஒன்று வரப்பெற்றோம். புத்தகம் சிறிதாயினும் இதன் மகிமை உள்ளபடி பெரிதாயிருக்கிறது. இது இந்தியாவிற்கே ஒரு பூஷணமாக விளங்கும் - பண்டித மதன்மோஹன மாளவியா இயற்றியது: ஹிந்தி பிரசார சபையாரால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. இந்நூலை நம்மவர் ஒவ்வொருவரும் வாங்கிப படிக்க வேண்டிய தவசியமாகும். இக்காலத்தவர்க்கு இப்படிப்பட்ட பிரசுரங்கள் நமது மதத்திலும் மந்திர உண்மையிலும் நல்ல தெளிவைக் கொடுக்குமென் பதிலையமில்லை. விலை அணா 2.

ஹிந்தி பிரசார சபை,
193, ஹைரோட், திருவல்லிக்கேணி,
என்று எழுதினால் கிடைக்கும்.

ஓஷதிகள்

—— :o: ——

“ஓங்காரி யென்பாலவளொரு பெண்பிள்ளை, நீங்காத பச்சை நிறத்தையுடையவள்” என்ற திருமந்திரோபதேசப்படி “நீங்காத பச்சை நிறத்தை” பிராண முத்திரையாகத் தரித்திருப்பதால், “பச்சிலை” யென்றுபேர்கொண்ட மூலிகைகளில் எப்போதும்சத்து அதிகம். இந்த வுண்மை யுணர்ந்து அநேக காலமாய் நமது ஆரியர்கள் உபயோகித்து வந்த மருந்து முறைகளின் குணங்களைத் தெரிந்துகொண்டு அவைகளைப் பழகுகிறவர்கள் மிகவும் சிலர் தான். வைத்திய சாஸ்திரத்தில் மிகவும் கெட்டிக்காரர்களான ஹிபாகிரேடீஸ் முதலிய அநேக வித்வான்கள் தங்களுக்கு வேண்டிய சாமக்கிரியைகளை நமது ஆரியர்களிடமிருந்து தான் தெரிந்து கொண்டவர்கள் என்று அநேகர் எழுதியிருக்கிறார்கள். ஆரியர்கள் முக்கியமாய்க் கையாண்டு வந்த மருந்துகளை ஓஷதிகளினாலேயே செய்து வந்தார்கள். இந்த மாதிரி பச்சிலைகளைக் கொண்டு மருந்து செய்து வைத்துக்கொண்டு வைத்தியம் செய்து வந்ததில் நமது ஆரியர்கள் மிகவும் தேர்ச்சியடைந்திருந்தார்கள்; அதிக கீர்த்தியையும் அடைந்திருந்தார்கள். ஓஷதிகளின் குணங்களைக் குறித்து அனேக கிரந்தங்கள் இருக்கின்றன. அவைகளில் பார்த்தால் அவர்கள் வைத்தியம் செய்துவந்த முறையும் ஓஷதி

களின் சிறப்பும் மிகவும் தெளிவாக ஏற்படும். வியாதிகளைக் கண்டிப்பதில் ஓஷதிகளுக்குச் சரியாகும் ஒளஷதங்கள் கிடைப்பது துர்லபம், மற்றும் ஓஷதிகளைக் கொண்டு தகுந்த மருந்துசெய்யும் வைத்திய சீலர்கள் பலர், ஆயுர்வேத மென்று கூறும்'ஆதிவியாதி வைத்தியத்தை அவலம்பித்து வருகிறார்கள். எனினும் ரசாயன சாஸ்திரானுசாரமாய்ச் செய்யப்பட்டு வரும் உழைப்பையும் ஆதரவையும் போல் இவ் வாயுர்வேத வைத்தியத்திற்கு உழைப்பும் ஆதரவும் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் தெரிகிறது. இந்த ஓஷதிகளில் தேர்ந்த வைத்திய பரிசீலர்கள் இவைகளைக் கொண்டு அதிசயமானபடி ஆதி-வியாதிகளைச் சொஸ்தம் செய்துவருகிறார்கள். இது வாஸ்தவம். இதற் குதாரணமாக மேனாடுகளில் ஓஷதிகள் பிரயோகிக்கப்பட்டு வருவதைக் காணலாம். சீனா தேசத்து வாசியாகிய யீபூலன் என்பவர் பச்சிலைகளின் பெருமையையும் குணங்களையும் நன்றா யறிந்து அமெரிக்காவுக்குப் போய் அங்கே அநேக நோயாளிகளைக் குணப்படுத்தி யிருக்கிறார். பெரிய டாக்டர்களும் அவரை வியந்து புகழ்கிறார்கள். தீராத நோயென்று டாக்டர்கள் கைவிட்ட அநேக நோய்களையும் இவர் குணப்படுத்தி யிருக்கிறாராம். அந்த தேசத்து ஜனங்கள் எல்லாரும் பச்சிலை வைத்தியத்தில் மோகங் கொண்டிருக்கிறார்கள். ஆசியா கண்டத்துப் பச்சிலைகளின் மகத்துவம் அமெரிக்கா கண்டத்தில் விளங்குகின்றது. கிழக்கில் உதிக்கும் சூரியனது பிரகாசம் மேற்கில் பிரகாசிப்பது இயல்பு

தானே. இன்றைக்கும் யோக முறையில் பழகுகிற அப்பியாஸிகள் "கல்பசாதனம்" என்று சொல்லிச் சில அருமையான முறைகளை யனுசரித்து வருகிறார்கள். "மணிமந்திர ஒளஷதம்" என்று பேர் வழங்குவதை நம்மவர் கேட்டிருக்கலாம். குளிகை மணிகளால் யோகசாதனம் பெற்றவர்கள் எவ்வளவோ ஸித்திகளெல்லாம் சாதித்திருக்கிறார்கள். மந்திரம் மனோவியாதியாம் "ஆதியை" நீக்கும். ஓஷதிகளாலான ஒளஷதம் ஆதியி லிருந்துண்டான வியாதியையும் பதார்த்தங்களின் மிகுதி குறைவாலுண்டாகும் தேகஜாட்டியங்களையும் போக்கும். (விவேகசிந்தாமணி).

சூது விரும்பேல்

சூதாட இணங்கிய நளனை நோக்கி அவன் அமைச்சர் சூது தீதென இயம்பியது—

'ஐய நீ ஆடுதற்கமைந்த சூதுமற்
றெய்து நல் குரவினுக் கியைந்த தூதுவெம்
பொய்யினுக் கருந்துணை புன்மைக்கீன்ற தாய்
மெய்யினுக்குறும் பகை யென்பர் மேலையோர்'

'சாதல் கவறுடல் கள்ளுண்டல் பொய்மொழிதல்
ஈதல் மறுத்தல் இவைகண்டாய்-போதிற்
சினையாமை வைகுந் திருநாடா செம்மை
நினையாமை பூண்டார் நெறி'

'அறத்தைவேர் கல்லும் அருநரகிற் சேர்க்கும்
திறத்தையே கொண்டருளைத் தேய்க்கும்-மறத்தையே
பூண்டு விரோதஞ் செய்யும் பொய்ச்சூதை மிக்கோர்கள்
தீண்டுவரோ என்றார் தெரிந்து.'

Agricultural Notes.

கம்பளிப் பூச்சியைப்பற்றிய குறிப்பு

—— :o: ——

தமிழ் ஜில்லாக்களில் "கம்பளிப்பூச்சி" என்று சொல்லுகிற மயிருள்ள புழுக்கள் பயிரைச் சேதப்படுத்தும் ஜெந்துக்களென்று தென்னிந்தியாவிலுள்ள எல்லாருக்குந் தெரியும். இது மழைக் காலத்தில் திடீரென்று உண்டாகி வேளாண்மைகளுக்கு அதிகக் கெடுதி செய்கிறது. அவைகள் சோளம், கம்பு, நிலக்கடலை, பயறு வகைகள், இவைகளைத்தான் விசேஷமாக அழித்து விடுகின்றன.

இந்தக் கம்பளிப்பூச்சிகள் பயிர்களைத் தின்றபின் மண்ணுக்குள் நுழைந்துகொண்டு பேரீச்சங் கொட்டையைப்போல் உருவமாறி மறு வருஷம் மழைக் காலம் வரும்வரையில் அந்தப்படியே (மண்ணுக்குள்) கிடக்கும். அக்காலம் ஆரம்பித்துத் தரை போதுமானபடி நனைந்ததும் இந்தப் பூச்சிகள் மேல்நோக்கித் துளைத்துக்கொண்டு தரை மட்டத்துக்கு வந்து பொட்டுப் பொட்டாயிருக்கும் சிறகுகளுடனும், மஞ்சள் அல்லது சிவப்பு வரிகளுள்ள உடம்போடுங் கூடிய வெள்ளைப் பூச்சிகளாக வெளிக் கிளம்புகின்றன. அப்போது கிராமாந்தரங்களில் விளக்கைச் சுற்றிலும் இவைகள் கூட்டமாய்த் திரண்டு கொண்டிருப்பதைப் பார்க்கலாம். பெட்டைப் பூச்சிகள் இலைகளில் அநேக முட்டைகளிடுகின்றன. கம்பு, சோளம், நிலக்கடலை,

இவைகளின் இலைகளின் கீழ்ப்பக்கத்தில் திரள் திரளாய் முட்டைகளிருக்கக் காணலாம். இந்த முட்டைகள் பொரிந்து பின் கம்பளிப் பூச்சிகளாகும்.

இதற்குப் பரிகாரமான உபாயங்கள்:—இந்தப் பூச்சிகள் முட்டையிடுவதால் தான் திடீரென்று புழுக்கள் உற்பத்தியாகின்றன. ஒரு பூச்சி 500 முதல் 1,500 முட்டை வரையிலும் இடும். ஆகையால் ஒரு பூச்சியைக் கொன்றால் பின்னிட்டு 500 முதல் 1,500 புழுக்கள் வரையிலும் கொன்றது போலாகும். நல்ல மழை பெய்து தரை தக்கபடி நனைந்ததும் கூடுகளிலிருந்து நூற்றுக்கணக்காய்ப் பூச்சிகள் புறப்படுகின்றன. இந்தப் பூச்சிகளுக்கு விளக்கண்டை வந்து சேர அதிக ஆவல். இந்தப் புழுக்களின் தொந்தரவுள்ள இடங்களில் சமயம்பார்த்து விளக்குப் பொறிகளை வைத்தால் இந்தப் பூச்சிகளை ஒருமிக்கத் தொலைத்து விடலாம்.

விளக்குப்பொறி என்பது விளக்கண்டை வரும் பூச்சிகளைத் தானாகக் கொல்லும் ஒரு சூத்திரம். இச் சூத்திரம் பூச்சிகளை இழுக்கிறதற்கு விளக்கொன்றும், அதன்கீழ் வந்த பூச்சிகளைக் கொல்ல மண்ணெண்ணெய் கலந்த தண்ணீருள்ள தட்டும் ஒன்றும் சேர்ந்து அமைந்துள்ளது. ஒரு சிறு மண்ணெண்ணெய் விளக்கை உள்ளே வைக்கக்கூடிய நான்கு மூலைக் கண்ணாடி லாந்தரை வைத்துக்கொண்டு விளக்குப் பொறி செய்து விடலாம். இதன் விலை சொற்பம். இது எல்லா ஊர்களிலும் சுமார் 6 அணாவுக்கு வாங்கலாம். தேங்காய் எண்ணெய் பாதி மண்ணெண்ணெய் பாதியாகக் கலந்து உபயோகிக்கவேண்டும். தனி மண்

ணெண்ணெயைவிட இந்தக் கலப்பு பிரகாசமாய் எரியும். புகையும் பிடியாது. பூச்சிகளைப் பிடிப்பதற்கான மண்ணெண்ணெய் கலந்த தண்ணீரின் விஸ்தீரணம் அதிகமாய் இருக்கும்படி தட்டம் அகன்று இருக்க வேண்டியது அவசியம். $2\frac{1}{2}$ முதல் 3 அங்குல ஆழமும இரண்டடி சதுரம் உள்ள ஒரு தகரத் தட்டம் இதற்கு ஏற்றதென்று அநுபோகத்தில் தெரிந்திருக்கிறது. 6 அல்லது 8 அணாவுக்கு எந்தத் தகரக் கடைக்காரனும் இதைச் செய்து கொடுப்பான். இஃதில்லாவிட்டால் ஏற்றச்சால் போல் அகன்ற வாயுள்ள எந்தப் பாத்திரமும் இதற்கு உதவும்.

தனியாக ஒரு மூங்கிற்கால் நட்டு அதிலிருந்து தட்டத்திற்கு மேலே லாந்தரைத் தொங்கவிட வேண்டியது. ஆழமில்லாத பாத்திரமாயிருந்தால் அதன் நடுவில் ஒரு கல் வைத்து, அந்தக் கல்லின்மேல் லாந்தரை வைத்துவிடலாம். எந்தப் பயிரைக் காக்க இந்த ஏற்பாடு செய்கிறோமோ, அந்தப் பயிர் மட்டத்திற்கு மேல் இந்தக் கருவி முழுதும் உயர்ந்திருக்க வேண்டும். தூரத்திலிருந்து பார்த்தால் விளக்குத் தெரியும்படி ஒரு மண்குவியலின்மேல் வைக்கலாம்.

விளக்குப்பொறிச் சோதனைகள்:—இந்த உபாயம் பலிக்கிறதா என்பதைச் சோதித்தறியும்பொருட்டு 1909 வருஷம் ஜூலை ஆகஸ்டு மாதங்களில் மஞ்சகுப்பஞ் ஜில்லாவிலிருக்கிற பன்னிக்குப்பம் கிராமத்து நிலங்களில் 15 விளக்குப்பொறிகள் வைக்கப்பட்டிருந்தன. முதலில் ஒரு சிறுகூட்டம் முந்திய நாள் பெய்த 1 அங்குல மழைக்கப்புறம் ஜூலைமீ 23உ இரவிலும், பிறகு அதிலும் மிகப் பெரிய கும்பல் ஆகஸ்டுமீ 8உ பெய்த $1\frac{1}{2}$ அங்குல மழைக்குப்பின் 10உ சாய்ந்திரமும் ஆக இரண்டு வெவ்வேறு கும்பலாக அவ்வருஷம் இப்பூச்சிகள் புறப்பட்டன; முதற் கூட்டமோ கொஞ்சம். 400 பூச்சிகள் தான் 4 ராத்திரியில் பிடிபட்டன. இரண்டாவது கும்பலில் நாலிரவில் 7,400 பூச்சிகள் பிடிபட்டிறந்தன. அவைகளில் 3,800 முதனாளிரவிலேயே பிடிபட்டன. இந்த 7,400 பூச்சிகளிற் குறைந்த பட்சம் அரைவாசி பெட்டைகளாயிருக்க வேண்டும். ஒரு பெட்டை 500 முதல் 1,500 முட்டைகள் வரை யிடுகிற தென்பதை யோசித்துப் பார்க்கும்போது இந்தப் பொறி எவ்வளவு சிறந்ததென்பது தெளிவாய் நாம் காண்கிறோம். (இந்த உபாயத்தால்) தப்புவிக்கப்பட்ட நிலங்களுக் கருகில் ஒரு பூச்சிகூடக் காணாததினாலே பன்னிகுப்பங் கிராமத்துக் குடியானவர்கள் இது ஒரு கைகண்ட முறை என்று செவ்வையாய் அறிந்து கொண்டார்கள்.

முடிவு.—இந்தத் தந்திரத்தினால் பூரண நன்மையடைய வேண்டுமானால் ஒரு கிராமத்திலிருக்கும் இரண்டொரு குடியானவர்கள் மட்டும் தங்கள் நிலங்களில் விளக்குப்பொறிகளை வைத்தால் போதாது. அப்படிச் செய்வதனால் அந்தப் புலங்களிலும் அவைகளுக் கடுத்த புலங்களிலும் உள்ள பூச்சிகள் தப்பாமற் பிடிபட் டிறக்கும் என்றாலும், இந்த விளக்குப் பொறிகளுக்கு எட்டாத தூரத்திலுள்ள மற்றப் புலங்களில் இடப்பட்டிருக்கும் முட்டைகள் பொரித்த புழுக்கள் கடைசியில் இங்கும் வந்து சேர்ந்துவிடும். ஆகையால், ஒரு இடத்திலுள்ள எல்லாக் குடிகளும் ஏகோபித்துக்

கொல்லைகளெங்கும் விளக்குப் பொறிகளைக் கட்டாயம் நடவேண்டும். இப்படி எல்லாரும் ஒருமித்துச் செய்வதால் இந்த உபாதையை வரவொட்டாமல் தடுக்க முடியும் என்று நம்பலாம். ஒன்று சேராமற் போனாலோ இப்பொறிகளெல்லாம் கேலிக்குத் தான் இடமாகும். கவனிக்கவேண்டிய மற்றொரு விஷயம் என்னவென்றால் (முதல்) மழை பெய்து நின்ற உடனே விளக்கு ஏற்றிவிடவேண்டும்; முதனாளிரவு பிடிபடும் பூச்சிகளின் தொகை பின்னிட்டுப் பிடிபடும் பூச்சிகளெல்லாவற்றையும் விட அதிமாகயிருக்கும். ஆணும் பெண்ணும் சேர்ந்து பின்னிட்டு விளக்கண்டை பூச்சிகள் ஆவலோடு விசேஷமாய் வருகிறதில்லை. இந்த உபாயம் கைகூட வேண்டுமானால் (மழை நின்றவுடனே) சற்றுந் தாமதம் செய்யாமல் விளக்குப் பொறிகளை வைத்து விடவேண்டியது அவசியம்.

விளக்குப்பொறி வைத்தல்.—செலவு சுருக்கமான விஷயம். அதற்குவேண்டிய கைம்முதல் ஒரு ரூபாவுக்கு மேலில்லை. லாந்தர் 6 அணா. தகரத் தட்டம் உபயோகிப்பதானால் அது ஒரு 6 அல்லது 8 அணா மூங்கிற்காற் சட்டம் வகையறாவுக்கு ஒன்று அல்லது இரண்டணாவுக்குமேற் செல்லாது. பத்திரமாய் வைத்துக் கொண்டால் பல வருஷமிருக்கும். ஒரு ராத்திரிக்கு ஒரு விளக்குக்கு 6 அல்லது 8 பைசா எண்ணெய் செல்லும். மொத்தத்தில் இரண்டு வாரத்துக்குமேல் விளக்கு வைக்கவேண்டியிராது. ஆகையினாலே எண்ணெய்ச் செலவு 8 அணா பிடிக்கும் (இக்கம்பளி பூச்சிகளால் விளைகிற நஷ்டத்தைப் பார்த்தாலோ) அரைவாசி, முக்கால்வாசி, பயிரைச் சேதப்படுத்தி நிலத்தின் நயத்திற்கும் பயிரின் உயர்ச்சிக்கும் தக்கபடி ஏகா ஒன்றுக்கு 20 ரூபா முதல் 50 ரூபா வரையில் நஷ்டம் உண்டாகிறது.

210782
சென்னை-600 008

பாலவிநோதினி

குழந்தைகளின் அன்பன்

வருட சந்தா தபாற் கூலி யுள்பட	இந்தியா, பர்மா, சிலோன் ...	ரூ. 1 8 0
	பினாங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ...	ரூ. 2 0 0
தனிச்சஞ்சிகை	விலை	ரூ. 0 2 0

1. பத்திரிகைக்கு ஜனவரி௴ முதல் டிசம்பர்௴ வரையில் ஒரு வருஷக்கணக்கு. எந்த மாதத்தில் சேர்ந்தாலும் ஜனவரி மாதம் முதற்கொண்டே சஞ்சிகைகள் அனுப்பப்படும். ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

2. சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் முழு விலாசத்தையும் தெளிவாய் எழுதியனுப்பவேண்டும்.

3. சந்தாத்தொகையை முன்னாடி செலுத்தியாவது அல்லது வி. பி. யில் கட்டியாவது பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

4. வி.பி. யில் பெற்றுக் கோள்வதானால் அணா மூன்று அதிகமாய்ச் செலவாகிறபடியால் சந்தாத்தொகையை மணியார்டர் செய்வதே நலம். இது முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது.

5. யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் ஒரு மாதத்திற்குள் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும்.

6. இடம்மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புதுவிலாசத்திற்கு வந்து சேரும் வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு நமக்குப் புதுவிலாசத்தை அறிவிக்கவேண்டும்.

7. சந்தா நெம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

விளம்பர விகிதம்

ஒரு பக்கத்திற்கு ஒரு மாதத்திற்கு ...ரூபா 10—0—0
அரைப் பக்கத்திற்கு ,, ... ரூபா 5—0—0
காண்டிராக்ட் ரேட்டானால் சகாயமுண்டு.

விலாஸம்:—மானேஜர்—பாலவிநோதினி ஆபீஸ்,
323, திருவொற்றியூர் ஹைரோட், சென்னை.

அமிர்தாஞ்சனம்.

சர்வ நோய்களுக்கும்

விதித்த ஒளஷதம்

விலை அணா 10 அணா 0-10-0

இருபத்தைந்து வருஷமாக
லக்ஷக்கணக்காக விற்று வருகிறது
அபூர்வ மூலிகைகளினால் தயார் செய்யப்பட்டு
அழகாய் பாக்கிங்செய்து உபயோகத்துக்குத் தயாராய்

எல்லா நோவுக்கும்

ஒரு கைகண்ட ஒளஷதம் அமிர்தாஞ்
சனமே. தலைவலி, முதுகுவலி, கீல்பிடிப்பு முத
லிய சகலநோய்களையும் நொடிப்பொழுதில் தீர்க்கும்.

அமிர்தாஞ்சன் டிப்போ,

7, தம்புச்செட்டி தெருவு, சென்னை.

Vavilla Press, Madras.